**‘மரபுக் கலைகளும் மக்கள் நலன்களும்’**

**திணை வகுப்பு - 2**

**- முனைவர். ஆ. அழகு செல்வம் (அன்னாவி)**

**1.1 நோக்கம்:**

திட்டத்தின் பயிலரங்கில் கலந்து கொள்ளும் மாணவர்கள்-குடும்பத்தினர், மரபுக்கலைகள் (நாட்டுப்புறக் கலைகள்) குறித்து அறிந்து கொள்வர். கலைப்பயிற்சிகள் வழி உடல் நலமும், உள்ள நலமும், மொழி வளமும் பெறுவர். தமிழ் அறம் பற்றியும், மனித மாண்பு பற்றியும், விழுமியங்கள், தமிழ்ப் பண்பாடு மற்றும் இயற்கை வாழ்வியல் குறித்தும் அறிந்து கொள்வர். கற்பனை வளமும், படைப்புத் திறனும் பெறுவர்.

**1.2 கலையும் இலக்கியமும்**

தமிழ் மரபில் ஆய கலைகள் 64 எனப்படுகின்றன. மற்றைய ஏனைய உயிரினங்களில் இருந்து மனிதனை வேறுபடுத்தி, உடல் திறனையும் உள்ளத் திறனையும் ஒழுங்குபடுத்தி, கற்பனை வளத்தைத் தருவது கலை இலக்கியங்களாகும்.

**கலை-இலக்கியங்களின் தோற்றம்**

மனிதரின் ஆக்கங்களுள் கலையும் இலக்கியமும் ஒன்றாக அமைகின்றன. இதற்கு அடிப்படையாக கற்பனையும் எதையும் புதிதாகச் செய்து (ஆக்கிப் பார்த்தல்) பார்க்க வேண்டும் என்னும் எண்ணமும் கலை இலக்கியங்களின் தோற்றத்திற்குக் காரணமாகும். மேலும் படைப்பாற்றலுடன் கூடிய, கற்றுக் கொள்வதற்கு இடமளிக்கக் கூடிய ஒன்றும் ஆகும். அதுமட்டுமன்று பன்முகத் தன்மையும் ஆளுமைத் தன்மையும் நிறைந்ததாகும்.

**கலைகளின் வகைகள்**

தமிழ்ச் சமூகம் இதுவரை கடந்து வந்த வரலாற்றின் வழி கலைகளைப் பல்வேறு வகைகளாகப் பிரித்து, அறிந்து, கற்றுப் பயன்படுத்தி வருகின்றனர். கவிதை, இசை, நடனம், ஓவியம், சிற்பம், கட்டிடம், ஒளிப்படம், வரைகதை (கதையும் படமும்) எனப் பகுத்தறியலாம். சிற்பம், ஓவியம் முதலியவை நுண்கலைகள் என்றும் மண், மரம் கொண்டு செய்யப்படும் (பொம்மைகள்) தொழில் கைவினைக் கலைகள் என்றும் அழைக்கப் பெறுகின்றன.

**முத்தமிழ்**

தமிழ் இலக்கண நூலாகவும் இலக்கிய நூலாகவும் போற்றப்படுகின்ற தொல்காப்பியம்,

**“ நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்**
**உரியதாகும் என்மனார் புலவர்”**

எனக் குறிப்பிடுகிறது. நாடக வழக்கில் செய்யுள்/பா வழக்கு என்றும் உலகியல் வழக்கு என்பது பேச்சு வழக்கு என்றும் உணர்த்தப் படுகிறது. கலியும் பரிபாடலும் இசைக்கும் பாட்டுக்கும் எடுத்துக் காட்டாகப் பேசப்படுகின்றன. இயல், இசை, நாடகத் தமிழ் என முத்தமிழையும் தொல்காப்பியம் குறித்துக் காட்டுகிறது.

**இயல்**

இயல் - இயற்றமிழ் - இயற்றப்படுவது. எழுதப்படுவது. கவிதை, கதை, புதினம் ஆகியவை இதனுள் அடங்கும். எழுத்து வடிவிலான நாடகம் இயற்றமிழினுள் அடங்கும்.

**இசை**

இசை - இசைத்தமிழ் எனப்படுகிறது. இசைக்கப்படுவது இசையாகும். எழுத்தும் சொல்லும் அளபெடுத்து இயைந்து ஒலிக்கப்படும் பொழுது (அசைஇ) இசையாக மாறுகிறது. இசை - குழலிசை, நரம்பிசை, தோலிசை, குரலிசை என அமைகின்றது. பாட்டு, விசில், குலவை, ஒப்பாரி (ஆரித்தல்), விம்முதல், அழுதல் முதலியன இசைத் தன்மை உடைய இசையாம். (இசைத் தன்மை உடையன)

**நாடகம்**

எழுத்து வடிவில் எழுதப்பட்ட நாடகங்கள், நிகழ்த்தப்படுகின்ற பொழுது நாடகம் என முழுவடிவமாக அழைக்கப்படுகின்றது.

- நிகழ்த்தப்படுவது நாடகமாகும்.
- இயலும் இசையும் இணைந்து நாடகக் கூறுகளாக மாறுகின்றன.
- கண்ணுக்கும் காதுக்கும் புலன் உணர்வைத் தருவதாக நாடகம் அமைகிறது.
- மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலனும் பார்த்து, கேட்டு, பாடி, ஆடி, உடலை அசைத்து நிகழ்த்தப்படுவது. உணரப்படுவது நாடகம்.
- இசைக்கலை 103 பண்களையும், ஆடற்கலை 108 தோற்றங்களையும் கொண்டது எனத் தமிழ் மரபு வரையறை செய்கிறது.

**கூத்துக்கலை**

தமிழ்க் கலை மரபில் கூத்து என்பது பழைய வடிவமாகும். கூற்று என்பது கூத்து என மாறியுள்ளது. (காற்று என்பது காத்து என மாறுவது போல). சங்கப் பாடல்களில் தலைவன் கூற்று, தலைவி கூற்று, செவிலி கூற்று, தோழி கூற்று என அமைந்துள்ளதைப் பார்க்க முடியும். கூற்று, யார் பேசுகிறார்கள் என்ற பொருளில் அமைகிறது. எனவே, வாய் மொழியாகச் சொல்லப்பட்டதைக் கூற்று எனலாம்.

**பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே,**
**அங்கதம், முதுசொல், அவ் ஏழ் நிலத்தும்,**
**வண் புகழ் மூவர் தண் பொழில் வரைப்பின்**
**நாற் பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்**
**யாப்பின் வழியது' என்மனார் புலவர். (தொல்காப்பியம், பொருளதிகாரம் 384 – செய்யுளியல்)**

என்று வாய்மொழி குறித்து தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. பா வகையை அமைக்க இதுவும் ஒரு யாப்பு முறையாக அமைந்ததுள்ளது.

பண்டிகை நாட்களில், விழாக்காலங்களில், கோயில் விழாக்களில் எனக் கூத்துக்கள் நிகழ்த்தப் பட்டன. இன்றும் நாடகம் மற்றும் திரைத்துறைச் சார்ந்தவர்களை "கூத்தாடிகள்" என்று குறிப்பிடுகின்றனர். இறைவனுக்கு கூத்தபிரான் என்ற பெயர் உண்டு. ஆடல்வல்லான் என்ற பெயரும் உண்டு.

**'கூத்தாட்டு வானாகி நின்றாயை'**

என்று இறைவனைக் குறிப்பிடுவார்கள்.

**"கூத்தரும் பாணர் பொருநர் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும் (புறத்திணை - நூற். 30 இளம்பூரணர் உரை)**

இங்கு குறிப்பிட்ட கூத்தர் மட்டுமின்றி, பாணர், பொருநர், விறலி ஆகியோரும் நிகழ்த்துக் கலைஞர்களாகவே அறியப்பட்டனர். கூத்து அகக்கூத்து, புறக்கூத்து என இருவகைப் பட்டது. அகக்கூத்து, வீட்டுக்குள் ஆடப்படும் வரிக்கூத்து. புறக்கூத்து, பொதுமக்கள் முன்னிலையில் ஆடப்படும்.

**கூத்துவகைகள்**

குரவைக்கூத்து, துணங்கைக் கூத்து, வெறியாட்டு, கொடுகொட்டி, பாண்டிங்கம், கபாலம், வள்ளிக்கூத்து, துடிக்கூத்து, கழல்நிலைக் கூத்து, உரற்கூத்து, மற்கூத்து, குடக்கூத்து (கரகம்), மரக்கால் கூத்து, தோற்பாவைக்கூத்து, ஆரியக்கூத்து (கயிறாட்டம் - கயிற்றில் ஆடுவது) வரிக்கூத்து, வசைக்கூத்து எனக் கூத்து பல வகைகள் உள்ளன. இவற்றுள் பல வழக்கொழிந்து விட்டன.

கூத்து ஒரு நிலையில் ஆடலையும் குறிக்கிறது. சிலம்பில் இடம் பெறும் மாதவி பதினொரு வகை ஆடல் (பதினொரு வகைக் கூத்து) நிகழ்த்தினாள் எனக் குறிப்புள்ளது. தெருக்கூத்தில் உரையை (பேச்சை) விட பாடலுக்கும் ஆடலுக்கும் முக்கியத்துவம் இருக்கும்.

**இசை - மக்களிசை**

இசைத் தமிழ் மரபில் தோன்றி, இயற்றமிழ் பகுதியாக வழங்கி வருவது 'பண்ணத்தி' என்பதாகும். பண்ணத்தி என்பது நாடகச் செய்யுள் வகையாகும். வடிவமாகும். அதாவது செய்யுள் வடிவில் நாடகத்தில்

பாடப்படுவது. கழனி உழவர் பாட்டு, மழைப்பாட்டு, வெள்ளப் பாட்டு, ஏர்ப்பாட்டு, நடவுப்பாட்டு, நெற்களப்பாட்டு, போர்க்களப்பாட்டு, வெற்றிப்பாட்டு என உழவு, விவசாயம், உணவு சார்ந்த பாடலாக அமைகிறது. நாட்டுப் புறப்பாடல் வகைகளுள் ஒன்றான பள்ளு வகைப் பாடல்கள் பண்ணத்தி வழி வந்தவை எனலாம்.

நாட்டுப் புறப் பாடலுள் ஓசை குறைந்த இசைப்பாடல் “பண்ணத்தி” என்றும் இசை குறைந்தது “புலன்” என்றும் அழைக்கப்படுகிறது. இதனை,

**பொருளொடு புணரா பொய்ம்மொழி**

**பொருளொடு புணர்ந்த நகைமொழி** (தொல். செய்யுளியல். 166)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. பாடல் வகையினின்று மாறுபட்ட வாய்மொழித் தன்மை வாய்ந்த ஓர் இலக்கிய (பாடல்) வகையாக, பண் அமையாத பாடலாக, பண்ணத்தி அமைகிறது. மக்களிசை மரபிசை பாடல்களின் இத்தன்மை விருத்தமாக அமைகிறது.

தமிழ் மண்ணில் தோன்றி வளர்ந்த மக்கள் கலைகள் போற்றிப் பாதுகாக்கப்பட்டு தொடர்ந்து மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றன. காலங் காலமாய் மக்களின் வாழ்வியற் செயல்பாடுகளில் ஒன்றாக விளங்கும் கலைகள் மரபாகப் பின்பற்றப் பட்டு வருகின்றன. இந்தப் பழக்கமும் வழக்கமும் தலைமுறைகள் தாண்டிப் பயணிக்கிற பொழுது, அவை பண்பாட்டு வடிவங்களாக மாற்றம் பெறுகின்றன.

தொல்காப்பியச் செய்யுளில், ஓசைகளின் பல்வேறு நிலைகளைச் செவிப்புலனுக்கு ஏற்ப நாவால் அசைத்துப் பாகுபடுத்திக் காட்டுவதைக் குறித்தது.

**மாத்திரை எழுத்தியல்**

**அசைவகை எனாஅ**

என்று குறிப்பிடுகிறார்.

வண்ணம் எனில் இசையின் வகைகள் ஆகும். இக்காலத்தில் சந்தக் குழிப்பு என்கின்றனர். அசைகள் நீட்டித்து ஓர் அசை மற்றொரு அசையுடன் இயைந்து இசைந்து அளபெடுத்து கால முறையில் அமையும் பொழுது இசையாக, பண்ணாக (ராகமாக) அமைகிறது.

**பாடல் - பண்**

பண் எனில் வடமொழியில் ராகம் எனக் குறிப்பதாகும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பது ஐந்திலக்கணம் ஆகும். எழுத்தினை நேரசை, நிரையசை எனப் பொருத்தி, சீர்களுக்குள் இணைப்பை அமைக்க வேண்டும். அடிதோறும் சீர்கள் அமைத்து, பாடலைக் கட்டி (யாப்பு செய்து) பண் அமைக்க வேண்டும். எழுத்தினைப் பிழையின்றியும் ஓசை (ஒலி)த் தவிறின்றியும் உச்சரித்திடும் பொழுது பண் பிழையாகாது.

பாடலின் அமைப்பு தொகையறா, பல்லவி, அநுபல்லவி, சரணம் என்று அமைக்கப்படுகிறது. தமிழ் முறையில் அளவடியை (நான்கு சீர், நான்கு அடிகள்) அடிப்படையாக வைத்துக் கொண்டு அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் ஆகிய ஓசை அமைப்புடன் பாடிட முடியும். பா வகை ஓசை முறையைத் தாண்டி “பண்ணத்தி” அமைப்பிலும் பாடிட முடியும். துறை, தாழிசை, விருத்தம், எனச் சேர்த்தும் அமைக்கலாம். பண் அமைத்துப் பாடலாம். பண்ணிற்கு அணிகலம் பாடல் என்பர். அளவடியால் அமைத்துப் பாடுவது எல்லோருக்கும், சிறப்பாக குழந்தைகளுக்கு, எளிமையும் இயல்புமாய் அமையும். அதாவது ஓரசை, ஈரசையால் அமையும் பாடல்கள் போதுமானது.

**இசைக் கருவிகள்**

பாடலைப் பாடுவதற்கும் இனிமையுடன் கேட்பதற்கும் பண்ணினைப் (இராகம்) பின்பற்றுவதற்கும் தாளம் - தாளக் கருவிகள் வேண்டும். இசைக் கருவிகள் வேண்டும். இயற்கையிலிருந்து மனிதன் இசையையும் இசைக் கருவிகளையும் உருவாக்கிக் கொண்டான். இறந்த மிருகங்களின் காய்ந்த தோலில் காற்றுப் பட்ட போதும், மூங்கில்கள் உரசிக் கொண்ட போதும், கைகளைத் தட்டி ஆரவாரித்த போதும், குரல் வழியாகவும் இசை உருவானதென்பர்.

குழலிசை, நரம்பிசை, தோலிசை என இசையைத் தரும் கருவிகள் பற்பல உள்ளன. புல்லாங்குழல், நாதஸ்வரம், கொம்பு போன்றவை குழலிசைக் கருவிகள். யாழ், கொன்றைக் குழல், ஆம்பர்(ல்) குழல், முல்லைக் குழல் என பூக்களின் வடிவை ஒத்து குழலிசைக் கருவிகள் அமைந்தன. தோலிசைக் கருவிகளாக பறை, தவில், உடுக்கு, தமுக்கு, முரசு, பம்பை, உறுமி போன்றவையும் இருக்கின்றன. தோலில் உண்டாகும் அதிர்வுகளால் இசை உருவாக்கப்படுகிறது.

தமிழ் இசைக் கருவிகளுள் தாளம் ஒரு முக்கியமான இசைக் கருவியாகும். ‘சிஞ்சா’ என்றும் இதனைக் குறிப்பர். பண்ணின் கால அளவைக் குறிக்கவும் கட்டுப்படுத்தவும் இது பயன்படுகிறது. காலத்தை ஒண்ணாங் காலம், ரெண்டாங் காலம், மூணாங் காலம் எனக் குறிப்பிடுவர். வேகமாகவும், மெதுவாகவும் பாடுதலை இது அமைத்திடும். தவில், நாதஸ்வரம், பம்மை, உறுமி, தாளம் மரபுக்கலைகளின் நிகழ்த்துதலுக்கு அடிப்படைக் கருவிகளாகும்.

**நாடகம்**

நாடகம் கலைகளின் அரசி என்று அழைக்கப்படுகிறது. இயலும் இசையும் கலந்து கதையைத் தழுவி நடித்துக் காட்டப்படுவதாகும். தொல்காப்பியர் **‘நாடக வழக்கினும்’** என்று குறிப்பிடுகிறார். எண்வகை மெய்ப்பாடு தோன்ற நிகழ்த்திக் காட்டப்படுவது நாடகம் ஆகும்.

**“நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப”**

என்று தொல்காப்பியம் சுட்டுகிறது.அகத்தியம், கூத்த நூல், குணநூல், என நாடகத்திற்கான நூற்கள் இருந்ததாக இலக்கியக் குறிப்புகள் உள்ளன.

அரசனுக்கு நிகழ்த்திக் காட்டப்பட்டது வேத்தியல் எனவும், மக்களுக்குப் பொது வெளியில் நடத்திக் காட்டப்பட்டது பொதுவியல் எனவும் அழைக்கப்பட்டது.

நாடக அரங்கம், மேடை அமைப்பு, திரைச்சீலைகள் முதலியன குறித்துச் சிலப்பதிகாரம் மிக நுட்பமாகவும், விரிவாகவும் குறிப்பிடுகிறது.

புராணக் கதைகள் (மகாபாரதம், இராமாயணம்), மன்னர்களின் கதைகள் ( சேரர், சோழர், பாண்டியர், பல்லவர்கள்) ராஜராஜ விஜயம், மத்தவிலாசப் பிரகசனம் முதலிய நாடகங்கள், தொடக்க காலங்களில் நிகழ்த்தப்பட்டன. பம்மல் சம்பந்த முதலியார், பரிதிமாற் கலைஞர், சங்கரதாஸ் சுவாமிகள் ஆகியோரின் வருகைக்குப் பின்னர் சமூக நாடகங்கள் பெருமளவில் தோற்றம் பெற்றன.

அறிவியல் தொழில் நுட்பங்கள் வளர்ந்த பிறகு நவீன நாடகங்கள் ஒளி-ஒலி அமைப்பு, மேடை வடிவமைப்பு, இசை, நடிப்பு, இயக்கம் ஆகியவற்றில் பெரும் மாற்றத்தைக் கொண்டு நிகழ்த்தப்பட்டன.

இன்றையச் சூழலில் மக்களின் தேவைகளை வாழ்வியல் சிக்கல்களைப் பேசும் நாடகங்கள் - வீதி நாடகங்கள், மக்கள் அரங்கம் என்ற முறையில் நிகழ்த்தப்பட்டன. மேடை, ஒளி-ஒலி, இசை, ஒப்பனை, கதாபாத்திர உடை முதலியவற்றைத் தவிர்த்து மக்கள் மத்தியில் நிகழ்த்தப்பட்டன. பெண்கல்வி, குழந்தைக்கல்வி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுகாதாரம் முதலிய பல்வேறு விழிப்புணர்வு செய்திகளைத் தாங்கி இந்நாடகங்கள் அமைந்தன. பள்ளி, கல்லூரிகளில் இந்நாடக முறையின் வழி பாடத்திட்டங்களை (நடத்திட முடியும்) நடத்தி வருகிறார்கள். எளிமையான வகுப்பறை அரங்கம், பொம்மலாட்டம் முதலிய கலைகள் வழி மாணவர்களுக்கு எளிமையாக, இனிமையாக கற்றல் அனுபவம் ஏற்படுகிறது.

**1.3 இடுபணி:**

- ஒன்று: திணை நாயகர்கள்  - பெற்றோர் அல்லது வீட்டில் இருக்கும் மாணவரின் உடன் பிறப்புகளில் ஒருவர், ஒரு திணை நாயகர் போல வேடமிட்டு, மாணவரிடம் தன் கதையைக் கூறும் ஒரு நிமிடம் முதல் மூன்று நிமிடக் காணொளி ஒன்றைத் தயாரிக்க வேண்டும். [எடுத்துக்காட்டு: பாரி வள்ளல் போல் வேடமிட்டு, கொடைக் குணத்தைப் பற்றி எடுத்துச் சொல்லலாம்.]
- இரண்டு: திணைப்பாடல் - ஆசிரியர் ஒருவர், தமிழ் அறம் ஒன்றைப் பற்றி, எட்டு வரிப் பாடல் எழுதி, மாணவருக்குப் பாடச் சொல்லிக் கொடுக்கும், இரண்டு நிமிடக் காணொளி தயாரிக்க வேண்டும். [எடுத்துக்காட்டு: பிறர் நலம் பேணுதல் பற்றி எட்டு வரிகள் எழுதி, ஒரு பண்ணில் (ராகத்தில்) மாணவருக்குச் சொல்லிக் கொடுக்கலாம்.]

************